# சங்ககாலப் பாணர்களும் அவர்தம் இசைக்கருவிகளும்

**மா. ரஜினி**

முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழாய்வுத்துறை,

திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி(நி-1),

விருத்தாசலம் –606001.

**நெறியாளர், முனைவர் இரா.சிவகுமார்,**

எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி,

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி(நி-1),

விருத்தாசலம் –606001

**முன்னுரை**

தமிழிலக்கியங்களை உலகெங்கும் கொண்டு சேர்த்து,பெரும் புகழினை நமக்கு ஈட்டித் தந்தப் பெருமை சங்க இலக்கியங்களைச் சாரும். பாணர்கள் இசையாலும் நடனத்தாலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்கள். தான் மட்டும் அல்லாமல் பிறரையும் வாழ்விப்பதில் சிறந்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர். பாணர் எனும் பெரும் பிரிவிலிருந்து பொருநர் முதலாக பல உட்பிரிவு கலைஞர்கள் உருவாகியுள்ளனர். சில பாணர்கள் மீன்பிடி தொழிலிலும் தங்களை உட்படுத்தியுள்ளனர். மன்னர்கள், வள்ளல்கள் முதலானோர் பாணர்களை விருந்தோம்பிய முறை வியக்க வைக்கிறது. பாணர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் தமிழை பறைசாற்றும் வகையில் உள்ளது. இத்தகைய தரவுகளை இந்த ஆய்வில் விரிவாகக் காணலாம்...

**பாணர் என்பதன் சொல்லாக்கம்**

'பண்' என்கிற சொல்லின் அடியாகப் பிறந்து முதல் எழுத்து நீண்டு வந்தது பாண் என்பதாகும். பாண் என்பது 'பாண்குடி', 'பாண்சேரி' , 'பாண்கடன்' என வருகின்ற சொற்களின் வேர் சொல்லாக அமைகிறது. 'பாண்' என்கிற சொல் 'அர்' எனும் விகுதிப் பெற்று 'பாணர்' என மாறியது. பண் இசைப்போர் பாணர் என்பது, தொழிலாகு பெயராகவும் பண்பாகு பெயராகவும் அமைந்துள்ளது.

'பிங்கல நிகண்டு' பாணர்களில் ஆண்களை சென்னியர்,வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைக்காரர் என குறிப்பிடுகிறது. பெண்களை பாடினி, விறலி, பாட்டி, மதங்கி என திவாகரம் குறிப்பிடுகிறது.[1] தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் நச்சினார்க்கினியர் பாணர்களை இசைப்பாணர்,யாழ்ப்பாணர்,மண்டை பாணர் என்று மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.[2] இசைக்கலையில் கைத்தேர்ந்தவர்களை இசைப்பாணர்கள் என்பர். பல நரம்புகளைக் கொண்ட யாழினைப் பயன்படுத்தியமையால் யாழ்ப்பாணர் என்பர். மண்டை ஓடு உண்ணும் கலமாகப் பயன்படுத்தி இருந்தமையால் மண்டைப்பாணர் என அழைப்பர் என்பது பொருத்தம் இல்லாதது ஆகும்.

பாணர்கள் தம் பெரும் பொழுதுகளையெல்லாம் பாடுவதிலும் கருவிகளை இசைப்பதிலும் கூத்துக்கலைகளிலும் செலவிட்டனர். சில பாணர்கள் கலையல்லாத தொழில்களையும்

செய்தனர். செல்வம் படைத்த மன்னர் முதலானோர் பாணர்களை ஆதரித்தப் பொழுதிலும், பாணர்கள் பொருள் அடிப்படையில் பின்தங்கியுள்ளனர். பாணர்கள் வள்ளல், மன்னர் போன்றோரின் மூலம் வந்த வருவாயினை சுயநலமாக தனக்காகப் பயன்படுத்தாமல், தன்னை போன்றோர் அனைவருக்கும் பகிர்ந்தனர். பாணர்கள் பெரும் கூட்டத்தையே வாழ வைத்தனர் என்பது புலனாகிறது.

**"கனிபொழி கானம் கிளையோடு உணீஇய**
**துனைபறை நிவக்கும் புள்ளினம் மான (மலைபடுகடாம் 54-55 )**

பாணர்கள் கவலையில்லாத பறவைகளின் வாழ்வை வாழ்ந்தனர். "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என வாழ்ந்தனர். சில பாணர்களைத் தவிர்த்துப் பல பாணர்கள் ஏழ்மை நிலையிலே வாழ்ந்தனர். சில பாணர்கள் பொன் நகை அணிந்து செல்வ நிலையில் இருந்தனர்.

**"மெய்வளம் பூத்த விழைதகு பொன்னணி**
**நைவளம் பூத்த நரம்பியைசீர்ப் பொய்வளம்**
**பூத்தன பாணாநின் பட்டு." (பரிபாடல் 18, 19-21)**

தன்னையே வெறுக்கும்படியாக அதிக துன்பகம் கொண்ட வறுமையராக பாணர் வாழ்ந்துள்ளனர்.

**"துணிகூர் எவ்வமொடு துயர் ஆற்றுப் படுப்ப " (சிறுபாணாற்றுப்படை -39-40)**

அதிக பசியின் காரணமாக உறவுடன் ஓர் இடத்தும் தங்காமல் திரிகின்ற பொலிவில்லாத வடிவத்தையும் கல்வியை வெறுக்கும் வாயினைக் கொண்டவர்களாக பாணர்கள் திகழ்ந்தனர்.

**பாணரின் தூதுப்பணி**

பாணர்களில் சிலர் தலைவனோடு நட்புக் கொண்டு விளங்கினர். தலைவன் மீது தலைவிக் கொண்ட ஊடலை தீர்ப்பதற்கு பாணர்கள் உதவியுள்ளனர். பாணர்கள் தலைவன், தலைவி இடையே ஊடலை தீர்க்கும் வாயிலாக இருந்துள்ளனர். தொல்காப்பியம் இதற்கு சான்றாக உள்ளது.

**"பாணன்' கூத்தன், விறலி ,பரத்தை,**
**யாணஞ் சான்ற அறிவர், கண்டோர்,**
**பேணுதகு சிறப்பில் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொன்னெறி மரபின் கற்பிற் குரியர்" (தொல்காப்பியம்-1446)**

தலைவியின் ஊடலைத் தவிர்க்க, தலைவன் ஓர் இளம்பாணனை தலைவியிடம் அனுப்புகிறான். தலைவியிடம் வந்த இளம் பாணன் தலைவனின் பெருமைகளை நாவன்மைப் புலப்படப் பேசினான். இளம்பாணன் நயமாகவும் அழகாகவும் பேசுவதைக் கண்டு அதிசயித்த தலைவி, நம்மிடையே இவ்வளவு அழகாக பேசும் இவன், தன் ஊர் மன்றத்தில் எப்படிப் பேசுவான் எனப் பாராட்டினாள். அதோடு இரந்து பெறுகின்ற உணவினால் பொலிவிழந்துக் காணப்படும் பாணனின் உடலைப்பார்த்து, தோழி

இவனுக்கு உணவுக்கொடு என்றாள் தலைவி. இதன்மூலம் தலைவி தலைவன் ஊடலைத் தவிர்த்தாள் என்பது புலனாகிறது.[3] சில பாணர்கள் தூது போதல் அல்லாமல் பரத்தையரிடம் தலைவனை அழைத்துச் செல்லும் பணியையும் செய்துள்ளனர். அப்படிப் பரத்தையர் தெருவில் செனற பாணனை, ஒரு யானை தாக்கவர, அவன் பரத்தமை இல்லில் புகுந்தான். இதைப் பார்த்து நகைத்த பரத்தையர் பெண்கள், நீ வந்த வீடு இதுவன்று அது என்று கூறி நகைத்தனர்.[4] சில பாணர் பரத்தையரிடம் தலைவனை சேர்க்கும் பணியில் ஈடுபட்டதால், சில பாணனை தலைவி வெறுத்தாள்.

**மீன்பிடி தொழிலில் பாணர்**

பாணர்களில் கீழ்நிலையில் இருந்தவர்கள் மீன் பிடிக்கின்ற தொழிலையும் செய்து வந்துள்ளனர். இதனைச் சங்கப் புலவர்கள் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

**----------------சிறுசின்**

**மீன் சீவும் பாண் சேரி" (புறநானூறு-348)**

சில சிறு மீன்களைப் பிடித்து உண்ணும் பாண் சேரியை உடைய 'தழும்பன்' என்பவரின் ஊணூர் என்பது இப்பாடலின் பொருளாகும். சிறிய வலை கொண்டு மீன்பிடிக்கும் செயலை 'மீன் சீவுதல்' என்பர். இந்தத் தொடரே மதுரைக்காஞ்சி நூலிலும்'

**"மீன் சீவும் பாண் சேரி யொடு" (மதுரைக்காஞ்சி.269)**

என வருகிறது.

மீனைப்பிடித்து மண்சட்டியில் வைக்கும் பழக்கத்தை பாணர்கள் மேற்கொண்டனர். என்பதை குறுந்தொகை பாடல் வெளிப்படுத்துகிறது.[5] மீன்பிடிக்கும் தொழிலிலும் பாண்மகள் ஈடுபட்டாள். ஆடவர் பிடித்த மீனை பாண்மகளிர் எடுத்துச் சென்று விற்று வருவர். பண்டமாற்று முறையில் மீனுக்கு பதில் முத்துக்கள், அணிகலன்கள் பெற்று வருவது வழக்கமாகும்.

**பாணர் பெற்ற பரிசுகள்**

பாணர்கள் அல்லது பாண்குடியினர் அனைவரும் வறுமையில் இருந்தனர் என சொல்ல முடியாது. மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் வள்ளல்களும் தம்மை நாடி வந்த பாண்குடியினர் வேறு எவரிடமும் இரக்கா வண்ணம், பொன்னும் பொருளும் வாரி வழங்கி பாணர்களை செல்வந்தர்களாக ஆக்கினர்.

**"பிறன் கடை மறப்ப" (புறநானூறு- 68)**

புறப்பாடல்களும் பதிற்றுப்பத்தும் பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்ற நூல்களும் பாணர்களுக்கு வள்ளல்கள் முதலியானோர் அளித்த பரிசுகளை வகைப்படுத்தி உள்ளன. பண்டையத் தமிழகம் வீரத்தின் அடையாளம். வேந்தர்களும் மக்களும் வீரம் செறிந்த வாழ்வு வாழ்ந்தனர். இதனைக் கண்ட பாண்குடியினர் வீர மிகுந்தவர்களை பாராட்டிப் பாடினர். பாணரின் இணையரான பாடினி கூட

வேந்தர்களின் மறத்தைப் பற்றி பாடியுள்ளார். இதனைப் பதிற்றுப்பத்து வெளிப்படுத்துகிறது.

**"மின்னிழை விறலியார் நின்மறம் பாட" (பதிற்றுப்பத்து- 54)**

அரசர்களைப் புகழ்ந்துப் பாடி பரிசில் பெற்ற பாடினியுடன் சென்ற பாணனுக்கும் பொன் தாமரைப்பூவை வெள்ளி நாரில் தொடுத்துக் கொடுத்தனர்.

**"பாணர் தாமரை மலையவும்" (புறநானூறு:12:361:34)**

சேரவேந்தர்கள் கலைவாணர்களாகிய பாண்குடியினர்க்குப் பரிசில் அளிப்பதைத் தமது கடமையாகக் கொண்டனர். பாணர்களுக்கு இமய வரம்பன் கொடுக்கும் முறையைக் குமட்டூர்க் கண்ணனார் "விரிந்த தலையாட்ட மணிந்த குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் தனக்கு வேண்டுமென்று கருதாமல் மிகுதியாய் நல்கினான்"[6] என பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

சிலப்பதிகாரக் காலத்தில் பாணரும் ஆடல் மகளும் எட்டாயிரம் பொன் பெற்றனர் என்பதைக் குறிப்பிடுகிறது.

**"முட்டில் பாணரும் ஆடியல் மகளிரும்**
**எட்டொடு புணர்ந்த ஆயிரம் பெறுப"**

(சிலம்பு -அரங்கேற்று காதை -அடி 162 -163. அடியார்க்கு நல்லார் உரை)

**பாணர்களை வரவேற்றலும் உபசரிப்பும்**

மக்கட் செல்வம் தருவது பெண்களின் கடமையாக இருந்தது. அதைப் போன்று பாண் கடன் ஆற்றுவது மன்னர்களின் கடமையாக கருதினர். தம்மை நாடி இரப்போர் வரவில்லையாயினும் அவரைத்தேடித் தேரையனுப்பி அழைத்து வந்து வேண்டுபவை எல்லாம் கொடுத்து சிறப்பிக்கும் முறையை பதிற்றுப்பத்து வெளிப்படுத்துகிறது.

**“ வாரார் ஆயினும் இரவலர் வேண்டித்**
**தேரின் தந்தவர்க்கு ஆர்பதன் நல்கும்**
**நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்” ( பதிற்றுப்பத்து. 55: 10 -12)**

பாணர்களை வள்ளல்கள் வரவேற்ற விதமும் உபசரித்த முறையும் பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் போன்றவற்றில் விளக்கமாகவும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. பாண்குடியினர் வல்வில் ஓரியை அவன் மலையில் சென்று கண்டனர். அவர்களுக்கு ஓரி இழையணி யானைகளையும் பொன்னரி மாலைகளையும் பிற கலன்களையும் கொடுத்து சிறப்பித்தான். ஓரியிடம் பாணர்கள் பெற்ற பெரும் பரிசால் பசியாறிய பாணர்கள் தமது கலைத்தொழிலான பாடலையும் ஆடலையும் மறந்தனர் என்று வன்பரணர் குறிப்பிடுகிறார்.[7]

பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையில், கரிகால் பெருவளத்தானை நாடிச் சென்ற பொருநருக்கு அன்பைப் பொழிந்தான். அமரச் செய்தான். குளிர் பார்வை தந்தான். ஈரும் பேனும் உடைய கந்தை ஆடையைக் நீக்கி நுட்பமான பூ வேலைப்பாடு அமைந்த ஆடையை கொடுத்தான். பொற்கிண்ணம் நிறைவாக மதுவைக் கொடுத்தான். இதனால்

இரவலர்கள் தன் மன வருத்தத்தையும் பசி வருத்தத்தையும் போக்கிக் கொண்டனர். உடல் அலுப்புப் போக திருமாவளவன் நல்கிய பஞ்சணையில் படுத்து உறங்கினர்.

களைப்பு நீங்கி வரும் பொருநர்களை வருக வருக என வரவேற்று, நன்றாக கொழுத்த செம்மறி ஆட்டின் தொடைக்கறியுடன் பக்குவமாக சுட்ட இறைச்சி துண்டங்களையும் தின்னுங்கள் இன்னும் தின்னுங்கள் எனும் அளவிற்கு வரவேற்பும் விருந்து உபசரிப்பும் செய்தான் கரிகால் பெருவளத்தான்.[8]

**பாணரின் இசைக்கருவிகள்**

கலைகளில் தலையாயது இசைகலை. இசையில் இன்பம் இயல்பாகவே அமைந்து கிடக்கிறது. அதனால் இசை தன்னைச் சார்ந்த உயிர்களைத் தன்பால் ஈர்க்கும். தன் வயப் படுத்துவது இசை. இசைக்கலை உணர்வின் உறைவிடம். இன்பம் தருவதில் நிறைவிடம். இறைப்பண்பின் மறைவிடம். இசைக்கலையில் அருட்பண்பு, அழகுணர்ச்சி ,அமைதிக்கூறு, ஒற்றுமை நயம் அதிகம் இருக்கின்றன. இசையைப் பற்றி பாரதியார் பின்வருமாறு பாடுகிறார்.

**“நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?**
**ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே**
**ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ? “ (குயில் பாட்டு 98 -100)**

பாலையாழினைக் கொண்டு இசை மீட்டின் ஆரலைக் கள்வர், கொலைத் தொழிலுக்குரிய தம் படைக்கலன்களைக் கைவிட்டு, மறநெறியிலிருந்து மாறி, அருள் நெறிக்கு மாற்றும் தன்மை உடையது பாலையாழ் என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது.

**“ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை” (பொருநராற்றுப்படை 21- 22)**

இசைக்கருவிகளுக்கு **இயங்கள்** எனவும் பெயர் உண்டு. சிறிய கருவிகளைக் **குறும்பல்லியம்** எனவும் பெரிய கருவிகளை **நெடும்பல்லியம்** எனவும் கூறினர். இசைக்கருவிகள் பல இயைந்து இணைந்து ஒலிப்பதை **‘ஆமந்திரிகை’** என்றனர்.

இசைக்கருவிகளை **நரம்புக்கருவி, துணைக்கருவி, தோல் கருவி, கஞ்சக்கருவி** என நான்கு வகைப்படுத்துவர். இவற்றுள் நரம்புக் கருவிகளை மூன்றாக பிரிக்கலாம்.

**(i) மீட்டுக் கருவிகள்**

கையினாலோ மரம் அல்லது உலோகத் துண்டினாலோ இழுத்துவிட்டு அதிருமாறு செய்யப்படுவது மீட்டுக் கருவிகள். பண்டைய நூல்களில் **கோணம்** எனக் கையாளப்பட்டுள்ளது. யாழும் வீணை வகைகளும் கோட்டு வாத்தியமும் மீட்டுக் கருவிகள் வகை சார்ந்தவை ஆகும்.

**(ii) வில் கருவிகள்**

ஒரு வில்லினால் நரம்பைத் தேய்த்து ஒலியை எழுப்புவது.

**(iii) அடி கருவிகள்**

சிறுசம்மட்டியால் கம்பிகளை அடித்து ஒலியை எழுப்புவது.

நரம்புக் கருவிகளில் தலைச்சிறந்தது யாழ்க்கருவி ஆகும்.

**துளைக் கருவிகள் இரு வகைப்படும்**

**முதல் வகை**

துருத்தியை ஒத்த எந்திரத்தின் உதவியால் கருவிக்குள் காற்று ஊதப்படுகிறது.

ஆர்கன், ஆர்மோனியம் இவ்வகைச் சார்ந்தது. இவை பண்டையக் காலத்து இருந்ததாகத் தெரியவில்லை.

**இரண்டாம் வகை**

பயில்வோன் இவற்றில் காற்றை ஊதி, இசையை எழுப்புகின்றான்.

கங்கு, கொம்பு, குழல், நாதசுரம், முகவீணை போன்ற கருவிகள் இதற்கு உதாரணமாகும்.

**தோற்கருவிகள்**

முன்பு பல வகையில் பயன்பட்டன. பேரிகை, நகரா போன்றன போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்டன. எச்சரிக்கைக்கும் அறிவிப்புக்கும் முரசு கொட்டுவது வழக்கம். இவற்றில் சில ஒரு முகமும் இருமுகமும் உடையவை. கையினால் அடித்தும் கம்பினால் அடித்தும் ஒலி எழுப்பப்படும்.

**தண்ணுமை** கருவி தோற்கருவிகளுக்கு உதாரணம். இதனை இக்காலத்தில் மிருதங்கம் என்பர்.

**கஞ்சக் கருவிகள்**

தாளம் போன்றன கஞ்சக் கருவி வகையாகும். தாளம் போன்ற கஞ்சக் கருவிகளில் எழுப்பப்படும் ஒலியை, இசையை ஒத்த சந்தம் எனலாம். இவற்றில் இசைச் சுரங்களைத் தாள வடிவில் வெளிப்படுத்தலாமே தவிர வேறு அலங்காரங்களையோ, தனிச்சுரங்களையோ பெற இயலாது.

**'யாழ்' நரம்புகள் அடிப்படையில் வகைப்பாடு**

1.பேரியாழ் 21 நரம்புகள் கொண்டது.

2. மகரயாழ் 19 நரம்புகள் கொண்டது.

3.சகோடயாழ் 14 நரம்புகள் கொண்டது.

4.செங்கோட்டியாழ் 07 நரம்புகள் கொண்டது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் பாணர்கள் முதலான கலைஞர்களை புலவர்கள் வெளிக்கொணர்ந்த விதம், தமிழிலக்கியத்தில் தனித்துவம் பெறுகிறது. இதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. கலைஞர்கள் மக்களோடு மக்களாய் சுயநலம் பேணாமல் நடுவுநிலைமை பின்பற்றிய விதம் இந்த ஆய்வில் எடுத்து உரைக்கப்பட்டுள்ளன. பாணர்கள் தமது வாழ்வியலில் கடைபிடித்த நெறிகளையும் வாழ்வியல் கூறுகளையும் நுணுகி ஆராய இவ்வாய்வு உறுதுணையாக நிற்கும். பலவகையில் திகழக்கூடிய இசைக்கருவிகளை மீட்பதிலும் பாதுக்காப்பதிலும் கலை வல்லுநர்களாக பாணர்கள் திகழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இறைவனைப் போற்றிப் பாடும் புலவர்களில் ஒருவராகவும் பாணர்கள் இருந்துள்ளனர் என்பதையும் இவ்வாய்வில் அறிய முடிகிறது. நாளைய இலக்கிய சமூகத்திற்கு பயனுள்ள ஓர் ஆய்வாக இந்த ஆய்வு அமையும் என நம்புகிறேன்.

**அடிக்குறிப்புகள்**

1. திவாகரம்
2. தொல்காப்பியம்.பொருளதிகாரம்.நூற்பா 91 . நச்சர் உரை .
3. குறுந்தொகை -33
4. அகநானூறு-56
5. குறுந்தொகை-169

6.பதிற்றுப்பத்து, 20: 16-17

7.புறநானூறு , பாடல் 153.

8.பெருநராற்றுப்படை, வரி 159-170.

**துணைநூற்பட்டியல்**

1. சாமி சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டையத் தமிழரும், சாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம், சென்னை-94 , செப்-1986

2.வெ.மணிசங்கர், எளிய உரையில் பத்துப்பாட்டு, மகாலட்சுமி பதிப்பகம் ,வேலூர்.டிசம்பர் -2001

3.பக்தவச்சல பாரதி , பாணர்கள் இனவரைவியல் , அடையாள பதிப்பகம் .

4. முனைவர் சி . இராமச்சந்திரன் , பண்டையத் தமிழகத்தில் பாணர் வாழ்வு, முத்துக்கமலம் இணைய இதழ்.

5. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் , சங்க இலக்கியம் ,2023